# 16.அல்குர்ஆன் தொகுக்கப்படல்

01. குத்தாபுல் வஹி எனப்படுவோர் யார்?
வஹியை எழுதுபவர்கள்

02. அல்குர்ஆன் எழுதப்பட்ட சாதனங்கள் எவை?
பட்டை,அகலமான எலும்புகள் தோல்

| <u>பகுதி அ</u> | <u>பகுதி ஆ</u> |
|---|---|
| 01.அல்குர்ஆன் ஓதப்படும ஒழுங்க் | 01.ஆர்மேனிய யுத்தம் |
| 02.அல்குர்ஆன் தொகுப்பதற்கு அமைக்கப்பட்ட குழுத்தலைவர் | 02.தர்தீபுத்திலாவத் |
| 03.கலிபா உஸ்மான்(ரழி) அவர்கள் காலத்தில் இடம்பெற்ற யுத்தம் | 03.ஹப்ஸர்(ரழி) |
| 04.கலிபா உமர்(ரழி) அவர்கள் வபாத்தை தொடர்ந்து குர்ஆன் பிரதியை பாதுகாப்பாக வைத்திருந்தவர் | 04.பட்டை அகலமான எலும்பு |
| 05.ஆரம்பத்தில் வஹி எழுதப்பயன்படுத்தப்பட்ட சாதனங்கள் | 05.ஸைத்இப்னு ஸாபித் |

# 17.ஸூறதுல்ழுஹா

01.ஸூறதுல்ழுஹா எங்கு இறக்கப்பட்டது?

மக்காவில்

02.இது எத்தனையாவது அத்தியாயமாகும்?

93வது

03.இது எத்தனை வசனங்கள் கொண்டது?

11வசனங்கள்

04.ஸூறதுல்ழுஹா இறக்கப்படுவதற்க்கான பின்னனிக் காரணி யாது?

முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்கு வந்து கொண்டிருந்த வஹி சில காலங்கள் தாமதமாகியதுடன் ஜிப்ரில்(அலை) அவர்களுடனான தொடர்பும் துண்டிப்பாகியது. இவ் வேளையில் அபூலஹபின் மனைவி உட்பட முஷ்ரிக்குகள் நபியவர்களை கேலி செய்தார்கள். இதனால் நபி(ஸல்) அவர்கள் மனச்சோர்வுற்றிருந்தார்கள். அவ்வேளை இந்த ஸூறா இறக்கப்பட்டது.

05. ஸூறதுல்ழுஹாவின் போதனைகள் யாவை?

1. நல்லடியார்களுக்கு இறைவனின் பாசமும் நேசமும் கிடைக்கும் அவர்களை அவன் கை விடவும் மாட்டான்.

2. இவ்வுலகிலும் மறுஉலகிலும் இறைவன் நல்லதையே தருவான் இங்கிருப்பதை விட மறுஉலகில் உள்ளவை மேலானவை என்பதை கூறி மறுமை வாழ்வின் பக்கம் தூண்டுகிறது.

3. அநாதைகளை கவனிக்க வேண்டும் யாசிப்போருக்கு கொடுத்து உதவ வேண்டும். அவர்களை இழிவு படுத்தக்கூடாது.

4. இறைவனால் எமக்கு தந்த பேரருளை எடுத்துரைத்து அவனுக்கு நன்றி செலுத்தவும் தூண்டுகிறது.

# 18. ஹதீஸ் துறை இமாம்கள்

01.ஹதீஸ் என்றால் என்ன?

நபி முஹம்மத்(ஸல்) அவர்களின் சொல்,செயல்,அங்கிகாரம்,அவர்களது குணங்கள்,அங்கலட்சணங்கள் முதலானவையாகும்.

02. நபி(ஸல்) அவர்களது காலத்தில் ஹதீஸ்கள் பதிவதற்கான உத்தியோகபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணங்கள்?

1. அல்குர்ஆனுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமை.
2. ஹதீஸ்,அல்குர்ஆனுடன் கலந்துவிடும் என்ற அச்சம்
3. எழுத்தறிவுடையோர் குறைவாக காணப்பட்டமை.

03. யாருடைய ஆட்சிக் காலத்தில் ஹதீஸ் நூலுருப்படுத்தப்பட்டது?

கலிபா உமர் இப்னு அப்துல் அஸீஸ்(றஹ்) அவர்களின் ஆட்சிக்காலத்தில்

04. ஸிஹாஉஸ்ஸித்தா எனப்படுவது யாது?

ஸஹீஹான ஆறு பெரும் ஹதீஸ் கிரந்தங்கள்

## இமாம் புஹாரி

05. இமாம் புஹாரி ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு பிறந்தார்கள்?

ஹிஜ்ரி 194ல்

06. இமாம் புஹாரியின் இயற் பெயர் என்ன?

முஹம்மது இப்னு இஸ்மாயில் அல் புஹாரி

07. ஸஹீஹ் புஹாரியில் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை யாது?

7275

08. இமாம் புஹாரி ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு வபாத்தானார்கள்?

ஹிஜ்ரி 256ல்

09. இமாம் புஹாரி ஆசிரியரின் பெயர் என்ன?

இஸ்ஹாக் இப்னு ராஹுவைஹி

## இமாம் முஸ்லிம்(ரஹ்)

10. இமாம் முஸ்லிம் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு எங்கு பிறந்தார்கள்?

ஹிஜ்ரி 204ல் நைஸாபூரில்

11. இமாம் முஸ்லிம்(ரஹ்) அவர்களின் இயற்பெயர் என்ன?

அபூல் ஹஸன் முஸ்லிம் இப்னு ஹஜ்ஜாஜ்

12. ஸஹீஹ் முஸ்லிம் ஹதீஸ் கிரந்தத்தின் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை யாது?

4000 ஹதீஸ்கள்

13. இமாம் புஹாரி,இமாம் முஸ்லிம் ஆகிய இருவரது நூல்களும் ஹதீஸ் துறை இமாம்களால் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

ஸஹீஹைஹன்

14. ஸஹீஹ் முஸ்லிமின் விளக்கவுரை ஆசிரியரியரான இமாம் நவவி எழுதிய விளக்கவுரை நூல் எது?

அல் மின்ஹாஜ்

## இமாம் அபூதாவுத்

15. இமாம் அபூதாவுத்தின் அவர்களின் இயற்பெயர் என்ன?

அபூதாவுத் ஸுலைமான் இப்னு அஸ்அஸ்

16. ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு எங்கு பிறந்தார்கள்?

ஹிஜ்ரி 202ல் ஸிஜிஸ்தான்

17. இவருடைய ஹதீஸ் கிரந்தத்தில் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை யாது?

4800 ஹதீஸ்கள்

18. இவர் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு வபாத்தானார்கள்?

ஹிஜ்ரி 275 பஸராவில்

## இமாம் திர்மிதி

19. இவரது இயற்பெயர் என்ன?

    அபூ மூஸா முஹம்மது இப்னு ஈஸா

20. இவர் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு எங்கு பிறந்தார்கள்?

    ஹிஜ்ரி 209 குராஸானில்

21. இவரது ஆசிரியர்கள் யார்?

    இமாம் புஹாரி,இமாம் முஸ்லிம்

22. இவரது நூலில் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை யாது?

    4800 ஹதீஸ்கள்

23. திர்மிதி கிரந்தத்தின் சிறப்பம்சங்கள் யாவை?

    1. ஹதீஸ்கள் திரும்ப திரும்ப இடம்பெறமாட்டாது.
    2. ஹதீஸ்களின் இறுதியில் அதன் தரம் குறிப்பிடப்பட்டிருக்கும்.

## இமாம் நஸாஈ

24. இவரது இயற்பெயர் என்ன?

    அபூ அப்துர்ரஹ்மான் அஹ்மத் இப்னு ஸுஐப்

25. இவர் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு எங்கு பிறந்தார்கள்?

ஹிஜ்ரி 215ல் குராஸானில்

26. இவரது நூலில் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை யாது?

4341 ஹதீஸ்கள்

27. இவர் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு எங்கு வபாத்தானார்கள்?

ஹிஜ்ரி 303ல் மக்காவில்

## இமாம் இப்னு மாஜா

28. இவர் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு எங்கு பிறந்தார்கள்?

ஹிஜ்ரி 209ல் கஸ்வின் நகரில்

29. இவரது இயற்பெயர் என்ன?

அபூ அப்துல்லாஹ் முஹம்மத் இப்னு ஜஸீத்

30. இவரது நூலில் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை யாது?

4000 ஹதீஸ்கள்

31. இவர் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு வபாத்தானார்கள்?

ஹிஜ்ரி 273ல்

32. ஸுனன் அர்பஆவில் உள்ளடங்கும் கிரந்தங்கள் எவை?
1. திர்மிதி  2. நஸாஈ  3. அபூதாவுத்  4. இப்னு மாஜா

## 19. ஹஜ்ஜதுல் விதா.ஃ.

01. ஹஜ்ஜதுல் விதா.ஃ. என்பதன் பொருள் யாது?
பிரியாவிடைக்குரிய ஹஜ்

02. நபி முஹம்மத்(ஸல்) அவர்கள் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு அவர்களது இறுதி ஹஜ்ஜை நிறைவேற்றினார்கள்?
ஹிஜ்ரி 10

03. நபி முஹம்மத்(ஸல்) அவர்கள் ஹஜ்ஜை நிறைவேற்ற மக்கா சென்ற போது மதீனாவில் யாரை பிரதிநிதியாக விட்டுச் சென்றார்கள்?
அபூ துஜானா(ரழி) அவர்களை

04. நபி (ஸல்) அவர்கள் இஹ்ராம் அணிந்த இடம் எது?
துல்ஹுலைபா

05. துல் ஹஜ் மாதம் 8ம் திகதி எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
யவ்முத் தர்வியா

06. நபி (ஸல்) அவர்களின் உரையை அஞ்சல் செய்த ஸகாபி யார்?

ரபிஅத் இப்னு உமையா

## செயற்பாடு

நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜதுல் விதா∴வில் வழியுறுத்திய விடயங்களை பாடநூலில் இருந்து தேடி எழுதுக?

# 20. மஹப்பதுர் ரஸூல்

01. மஹப்பதுர் ரஸூல் எனப்படுவது யாது?

நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு செலுத்துதல்.

02. நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு செலுத்துதல் தொடர்பான நபி மொழி ஒன்று?

"உங்களிள் ஒருவருக்கு அவரது தந்தை,தாய்,குழந்தைகள் ஏனைய மக்கள் அனைவரையும் விட நான் மிக அன்பானவராக ஆகும் வரை அவர் உண்மையுள்ள ஈமான் கொண்டவராக மாட்டார்"

03. நபி (ஸல்) அவர்கள் மீது நாம் ஏன் அன்பு வைக்க வேண்டும்?

1. நபி (ஸல்) அவர்கள் உலக மக்கள் அனைவருக்கும் ஒரு அருட்கொடையாக இருக்கிறார்கள்.
2. நபி (ஸல்) அவர்கள் தம் உம்மத்தினரை அதிகமாக நேசித்தமை.
3. மறுமையில் அனைவருக்காகவும் ஸபாஅத் செய்ய

அங்கிகாரம் பெற்ற ஒரு நபி

4. அல்லாஹ்வின் அன்பை பெறுவதற்கு நபி (ஸல்) அவர்களை நேசிப்பதும் பின்பற்றுவதும் நிபந்தனையாகும்.
5. நபி (ஸல்) அவர்களை நேசிப்பதால் அவர்களோடு சுவர்க்கத்தில் இருப்பதற்கு பாக்கியம் கிடைக்கும்.
6. ஈமான் பூர்த்தியாக நபியை நேசிப்பது நிபந்தனையாகும்.

04. நபி (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பை வெளிப்படுத்துவதற்க்கான வழிமுறைகள்?

1. நபி (ஸல்) மீது அதிகமாக ஸலவாத் சொல்லுதல்
2. அஹ்லுல் பைத்தினரை நேசித்தல்
3. ஸஹாப்பக்களை நேசித்தல்
4. நபி (ஸல்) அவர்களது ஸுன்னாவை பின்பற்றல்
5. நபி (ஸல்) அவர்களது ஸுறாவைப் படித்தல்
6. நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என உலகிற்கு எத்தி வைத்தல்
7. நபி (ஸல்) அவர்களை பிறர் தூற்றுவதற்கான வழிகளை ஏற்படுத்தாதிருத்தல்.